**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் நாள் செவ்வாய்கிழமை

CC. No. 70 of 2025

CNR No. TNTV15-000458 -2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 575/2023 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

1. ஆண்டனி கிளாரன்ஸ், 30/2025,
த/பெ. ஜோசப் ராஜேந்திரன்,
பெரும்பண்ணையூர்.

2. சரண் ஆகாஷ், 24/2025,
த/பெ. பழனியப்பா,
பெரும்பண்ணையூர்.

3. ஜோசப், 25/2025,
த/பெ. தங்கபிரகாசம்,
பெரும்பண்ணையூர்.

4. பெரியசாமி ஜெரார்டுஅலெக்சாண்டர், 41/2025,
த/பெ. குழந்தை ஜேசுதாஸ்,
பெரும்பண்ணையூர். ------ எதிரிகள்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:26 +0530

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.70 of 25 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.575/2023 |
| 3. | Name of the accused | 1. J. Antony Clarance<br>2. P. Saran Akash<br>3. T. Joseph<br>4. K. Periyasamy Jerard Alaxander |
| 4. | Father's Name | 1. S/o. Joseph Rajendran<br>2. S/o. Palaniyappa<br>3. S/o. Tangaprakasam<br>4. S/o. Kulanthi Jesudos |
| 5. | Occupation | - |
| 6. | Residence | A1, A2, A3 and A4 – Perumpannaiyur |
| 7. | Age | A1-30/25<br>A2-24/25<br>A3-25/25<br>A4-41/25 |
| 8. | Date of occurrence | 04.11.2023 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 05.11.2023<br>07.11.2023 |
| 10. | Date of apprehension | - |
| 11. | Date of release on bail | - |
| 12. | Date of commitment | Not applicable |
| 13. | Date of furnishing copies of document U/s | 22.08.2025 |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:31 +0530

<table>
<tr><td></td><td>207 Cr.P.C.</td><td colspan="3"></td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 20.09.2025 the accused questioned on substance of accusation 294(b),323,324,506(2) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>14.10.25</td><td>14.10.25</td></tr>
<tr><td>PW2</td><td>14.10.25</td><td>14.10.25</td></tr>
<tr><td>PW3</td><td>14.10.25</td><td>14.10.25</td></tr>
<tr><td>PW4</td><td>14.10.25</td><td>14.10.25</td></tr>
<tr><td>PW5</td><td>01.11.25</td><td>01.11.25</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">05.11.2025</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),323 இதச வின் கீழும், 2 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),323(2 counts),324,506(2) இதச வின் கீழும், 3 ஆம் எதிரி மீது சட்டப்பரிவு 294(b),323 இதச வின் கீழும், 4 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),323 இதச வின் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்துகு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:35 +0530

| | | |
|---|---|---|
| | | in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 ஆம் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. தங்கபாண்டியன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 4 ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ஜெயக்குமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. குடவாசல் காவல் சரகம் பெரும்பண்ணையூர் சிவன் கோவில் தெருவைச் சேர்ந்த தியாகராஜன் மகன் ராஜா குடும்பத்திற்கும் அவரது வீட்டுக்கும் பக்கத்து வீட்டில் வசிக்கும் 1 ஆம் எதிரி குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் வயலுக்கு போகும் போதெல்லாம் வாதி ராஜா வீட்டில் தனியாக இருக்கும் ராஜா மனைவி சாட்சி 3 அருள்செல்வியிடம் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார்கள். இந்த நிலையில் கடந்த 04.11.2023 ஆம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு வாதியும் சாட்சி 2 மற்றும் 4 ஆகியோர் வீட்டில் இருந்த போது சாட்சி 3 அருள்செல்வி 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் அடிக்கடி தகராறு செய்வதாக சொல்லி அழுத போது உடனே வாதியும் சாட்சி 2 சாட்சி 4 ஆகியோர் 1 ஆம் எதிரியின் வீட்டு வாசலுக்கு போய் நின்றுக்கொண்டு 1 ஆம் எதிரியிடம் வாதி ராஜா ஏன் இப்படி என் மனைவியிடம் அடிக்கடி சண்டை



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:40 +0530

போடுறீங்கன்னு கேட்ட போது 1 முதல் 4 ஆம் எதிரிகள் அப்படிதாண்டா சண்டை போடுவோம் உன்னால என்ன பன்னமுடியும் தேவடியா மவனே, புன்ட மவனே என்று வாதியை திட்டி கையாலும் கட்டையாலும் அடித்து வாதிக்கு சொறபகாயத்தை ஏற்டுத்தியும், 2 எதிரிகளாகிய நீர் 1 ஆம் எதிரியின் வீட்டுக்குள் இருந்து அரிவாளை எடுத்து வந்து வாதியின் இடது தோள்பட்டையில் வெட்டி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், அதை தடுக்க சாட்சி 2 ராஜகுமாரையும் சாட்சி 4 ஆரோக்கிய மேரியையும் கட்டையால் அடித்து சாட்சி 2 க்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 2 ஆம் எதிரி கையில் அரிவாளை வைத்துக்கொண்டு உங்க குடும்பத்தையே கொன்னு பொதச்சிவிடுவேன்டா என்று மிரட்டல் விடுத்ததால் எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 294(b),323,324,506(2) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் 1 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும், 2 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323,2 counts),324,506(2) இதச வின் கீழும், 3 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:44 +0530

இதச வின் கீழும், 4 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் பெரும்பண்ணையூரில் சிவன் கோவில் தெருவில் குடியிருந்து தச்சு வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகள் நான்கு தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது தெருவில் வசித்து வருகிறார்கள் என்றும், கடந்த 04.11.2023 ம் தேதி இரவு 07.30 மணியளவில் தானும் தனது சகோதரர் ராஜ்குமார் மற்றும் தனது அம்மா ஆரோக்கியமேரி ஆகியோர்களுடன் வீட்டில் இருந்து எனது மனைவி அருள்செல்வி என்பவருடன் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது தங்கள் வீட்டு வாசலில் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே வந்தோம் என்றும், அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த அடையாளம் தெரியாத சுமார் 10 நபர்கள் தங்களை கட்டையாலும் அரிவாளாலும் தாக்கிவிட்டார்கள் என்றும், அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகள் அருகில் இருந்த படியால் அவர்கள் மீது சந்தேகத்தின் பேரில் தான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது வந்து விசாரித்த குடவாசல் போலீசாரிடம்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:49 +0530

சொன்னேன் என்றும், போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள விபரங்கள் எனக்கு ஞாபகமில்லை என்றும், **மேற்படி புகார் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்னிட்டு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் பெரும்பண்ணையூரில் சிவன் கோவில் தெருவில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகள் நான்கு பேரையும் தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது தெருவில் எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றும், அ.சா.1 ராஜா எனது அண்ணன் என்றும், கடந்த 04.11.2023 ம் தேதி இரவு 07.30 மணியளவில் தானும் தனது சகோதரர் ராஜா மற்றும் தனது அம்மா ஆரோக்கியமேரி ஆகியோர்களுடன் வீட்டில் இருந்து தனது அண்ணி அருள்செல்வி என்பவருடன் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது தங்கள் வீட்டு வாசலில் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே வந்தோம் என்றும், அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த அடையாளம் தெரியாத சுமார் 10 நபர்கள் தங்களை கட்டையாலும் அரிவாளாலும் தாக்கிவிட்டார்கள் என்றும், அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், அந்த நேரம் இருட்டாக இருந்தது என்றும், அதனால் யார் வந்து தாக்கினார்கள் என்று என்னால் சரியாக கூற முடியாது. பின்னிட்டு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் பெரும்பண்ணையூரில் சிவன் கோவில் தெருவில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:53 +0530

செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகள் நான்கு பேரையும் தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது தெருவில் எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள். அ.சா.1 எனது கணவர் என்றும், கடந்த 04.11.2023 ம் தேதி இரவு 07.30 மணியளவில் தன்னை அடையாளம் தெரியாத சில நபர்கள் திட்டியதால் அதை தான் தனது வீட்டில் இருந்த எனது கணவர் மாமியார் மற்றும் கொழுந்தனாரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன் என்றும், அப்போது வாசலில் சத்தம் கேட்டு தாங்கள் வெளியே வந்தோம் என்றும், அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த அடையாளம் தெரியாத சுமார் 10 நபர்கள் தங்களை கட்டையாலும் அரிவாளாலும் தாக்கிவிட்டார்கள் என்றும், அதில் தனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும், தனது கணவருக்கு அவரது இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது என்றும், தடுக்க வந்த தனது மாமியாரையும் கொழுந்தனாரையும் தாக்கி விட்டார்கள் என்றும், அந்த நேரம் இருட்டாக இருந்தது என்றும், அதனால் யார் வந்து தாக்கினார்கள் என்று என்னால் சரியாக கூற முடியாது என்றும், பின்னிட்டு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் பெரும்பண்ணையூரில் சிவன் கோவில் தெருவில் குடியிருந்து ஓய்வில் இருக்கிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது தெருவில் எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றும், அ.சா.1, 2 தனது மகன்கள் என்றும், அ.சா.3 எனது மருமகள். (அ.சா.1 ன் மனைவி) என்றும், கடந்த 04.11.2023 ம் தேதி இரவு 07.30 மணியளவில் தனது மருமகள் அ.சா.3 தன்னை அடையாளம் தெரியாத சில நபர்கள் திட்டுவதாக சொல்லி வீட்டிலிருந்த அ.சா.1, 2 மற்றும் தன்னிடம் அழுதுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது வாசலில் சத்தம் கேட்டது. தாங்கள் நான்கு பேரும் தெரியாத சுமார் 10 நபர்கள் தங்களை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும்,



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:40:59 +0530

தடுத்து கேட்ட தனது மகன் அ.சா.1ஐ கட்டையாலும் அரிவாளாலும் தாக்கிவிட்டார்கள் என்றும், அதில் தனது மகன் அ.சா.1க்கு இடது தோள்பட்டையில் இரத்தகாயம் ஏற்பட்டது என்றும், தடுத்த தன்னையும் அ.சா.2 ராஜ்குமாரையும் அ.சா.3 அருள்செல்வியையும் கட்டையாலும் கையாலும் தாக்கினார்கள் என்றும், அதில் எங்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றும், பின்னிட்டு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(v) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.5 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரியிலிருந்த திரு.கணேசன் தற்போது அயற்பணியாக வெளியே சென்றுள்ளதாலும் அவருடன் தான் சமகாலத்தில் பணியாற்றுவதாலும், அவரையும் அவர்களது கையொப்பங்களையும் தனக்கு நன்கு தெரியும் என்பதாலும் தான் இவ்வழக்கில் சட்டப்பிரிவு 311 குவிமுச ன் படி மனு தாக்கல் செய்து அனுமதியின் பேரில் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக இருந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 07.11.2023 ந் தேதி மாலை 05.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.கணேசன் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்றவாறு நிலைய குற்ற எண்.575/2023 சட்டப் பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்பு அவர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:03 +0530

07.11.2023 ந் தேதி மாலை 06.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம்சென்று சாட்சிகள் தூசைராஜ், முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பங்கள் பெற்றுள்ளார் என்றும், **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு அவரது விசாரணையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் சரண் அடைந்து தக்க ஜாமீனில் வெளியே சென்றுள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா. 1 , அ.சா.2-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மோகன்ராம், ராஜேந்திரன், அருண்பிரசாத் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுகள் மற்றும் மருத்துவ சட்டக் கருத்துரைகள் பெற்றுள்ளார் என்றும், **அ.சா.1 க்கான விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சட்டக்கருத்துரை அ.சா.ஆ- 6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், **அ.சா.2 க்கான விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சட்டக்கருத்துரை அ.சா.ஆ-8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், இத்துடன் அவரது விசாரணையை முடித்து சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:07 +0530

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. <u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u>:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான ராஜா, குடவாசல் காவல் சரகம் பெரும்பண்ணையூர் சிவன் கோவில் தெருவைச் சேர்ந்த தியாகராஜன் மகன் ராஜா குடும்பத்திற்கும் அவரது வீட்டுக்கும் பக்கத்து வீட்டில் வசிக்கும் 1 ஆம் எதிரி குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் வயலுக்கு போகும் போதெல்லாம் வாதி ராஜா வீட்டில் தனியாக இருக்கும் ராஜா மனைவி சாட்சி 3 அருள்செல்வியிடம் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார்கள். இந்த நிலையில் கடந்த 04.11.2023 ஆம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு வாதியும்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:12 +0530

சாட்சி 2 மற்றும் 4 ஆகியோர் வீட்டில் இருந்த போது சாட்சி 3 அருள்செல்வி 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் அடிக்கடி தகராறு செய்வதாக சொல்லி அழுத போது உடனே வாதியும் சாட்சி 2 சாட்சி 4 ஆகியோர் 1 ஆம் எதிரியின் வீட்டு வாசலுக்கு போய் நின்றுக்கொண்டு 1 ஆம் எதிரியிடம் வாதி ராஜா ஏன் இப்படி என் மனைவியிடம் அடிக்கடி சண்டை போடுறீங்கன்னு கேட்ட போது 1 முதல் 4 ஆம் எதிரிகள் அப்படிதாண்டா சண்டை போடுவோம் உன்னால என்ன பன்னமுடியும் தேவடியா மவனே, புண்ட மவனே என்று வாதியை திட்டி கையாலும் கட்டையாலும் அடித்து வாதிக்கு சொற்பகாயத்தை ஏற்டுத்தியும், 2 எதிரிகளாகிய நீர் 1 ஆம் எதிரியின் வீட்டுக்குள் இருந்து அரிவாளை எடுத்து வந்து வாதியின் இடது தோள்பட்டையில் வெட்டி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், அதை தடுக்க சாட்சி 2 ராஜகுமாரையும் சாட்சி 4 ஆரோக்கிய மேரியையும் கட்டையால் அடித்து சாட்சி 2 க்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 2 ஆம் எதிரி கையில் அரிவாளை வைத்துக்கொண்டு உங்க குடும்பத்தையே கொன்னு பொதச்சிவிடுவேன்டா என கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது குடவாசல் பெரும்பண்ணையூரில் சிவன் கோவில் தெருவில் குடியிருந்து தச்சு வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகள் நான்கு தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது தெருவில் வசித்து வருகிறார்கள் என்றும், கடந்த 04.11.2023 ம் தேதி இரவு 07.30 மணியளவில் தானும் தனது சகோதரர் ராஜ்குமார் மற்றும் தனது அம்மா ஆரோக்கியமேரி ஆகியோர்களுடன் வீட்டில் இருந்து எனது மனைவி அருள்செல்வி என்பவருடன் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது தங்கள் வீட்டு வாசலில் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே வந்தோம் என்றும், அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த அடையாளம் தெரியாத சுமார்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:17 +0530

10 நபர்கள் தங்களை கட்டையாலும் அரிவாளாலும் தாக்கிவிட்டார்கள் என்றும், அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகள் அருகில் இருந்த படியால் அவர்கள் மீது சந்தேகத்தின் பேரில் தான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது வந்து விசாரித்த குடவாசல் போலீசாரிடம் சொன்னேன் என்றும், போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள விபரங்கள் எனக்கு ஞாபகமில்லை என்றும், **மேற்படி புகார் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்னிட்டு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, 3 மற்றும் 4 வரையில் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். மேலும், அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.5-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:33 +0530

எதிரிகள் குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த சமாதான மனுவில் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளதையும் காணமுடிகிறது.

16. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot Vs State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *"….We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."*

17. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:39 +0530

கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. எனவே, இவ்வழக்கில் 1 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும், 2 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323(2 counts),324,506(2) இதச வின் கீழும், 3 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும், 4 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 ஆம் ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும், 2 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323(2 counts),324,506(2) இதச வின் கீழும், 3 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும், 4 ஆம் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதச வின் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:44 +0530

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ராஜா |
| அ.சா.2 | திரு. ராஜ்குமார் |
| அ.சா.3 | திருமதி. அருள்செல்வி |
| அ.சா.4 | திருமதி. ஆரோக்கியமேரி |
| அ.சா.5 | திரு. ரவி-காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.11.2023 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 05.11.2023 | அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 07.11.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 07.11.2023 | பார்வை மகசர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 07.11.2023 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.6 | 04.11.2023 | அ.சா.1 க்கான விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 04.11.2023 | அ.சா.1 க்கான மருத்துவ சட்ட கருத்துரை |
| அ.சா.ஆ.8 | 04.11.2023 | அ.சா.2 க்கான விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.9 | 04.11.2023 | அ.சா.2 க்கான மருத்துவ சட்ட கருத்துரை |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | எதிரி-1,2,3,4 - - |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 08.04.2025 |
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 20.09.2025 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் 14.10.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 5. | சாட்சிகள் விசாரணை | |

| Witness | Date of Chief | Date of Cross |
|---|---|---|
| PW-1 : | 14.10.25 | 14.10.25 |
| PW-2 : | 14.10.25 | 14.10.25 |
| PW-3 : | 14.10.25 | 14.10.25 |
| PW-4 : | 14.10.25 | 14.10.25 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW-5 : | 01.11.25 | 01.11.25 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 05.11.2025 | | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.11 10:41:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.